DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

Case No.CC 314/2019

Prosecution witness – PW 3

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.முத்துராக்கு | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1, A2 produced.)
23.05.2024 at 03.00 PM

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் கரிசல்குளம் கிராமத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது தம்பி மகன். எதிரிகளை தெரியாது.

2. சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு எனது தம்பி நிலக்கோட்டை பக்கம் சென்று விட்டார்கள். தம்பி குடும்பத்தார் வீட்டில் யாரும் இல்லாததால் தினமும் நான் வீட்டிற்கு சென்று நான் லைட் போடுவது வழக்கம்.

3. காலை 06.00 மணியளவில் லைட்டை அணைப்பது வழக்கம். அன்று ஒருநாள் வழக்கம்போல் லைட்டை அணைப்பதற்காக சென்றபோது வீட்டின் கதவு திறந்து கிடந்தது. பூட்டுகள் உடைக்கப்பட்டிருந்தது.

4. ஊரிலுள்ளவர்கள் சம்பவம் குறித்து எனது தம்பிக்கு தகவல் சொல்லியுள்ளார்கள். எனது தம்பி மகன் வீட்டிற்கு வந்தார். போலீசாரும் வந்தார்கள். விசாரித்தார்கள்.

5. வீட்டில் பொருட்கள் எதுவும் திருடப்படவில்லை. அன்றையதினம் சண்முகவேல் என்பவரது வீட்டுக்கதவும் உடைக்கப்பட்டிருந்தது. அவரது வீட்டிலும் பொருட்கள் எதுவும்

திருடப்படவில்லை.

6. எனது தம்பி மகன் சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்தார். என்னை போலீசார் விசாரித்தார்கள். வீட்டை உடைத்த நபர்களை போலீசார் கண்டுபிடித்தார்களா என்று எனக்கு தெரியாது.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை இல்லை.